www.StudyGuideIndia.com

**3010**

Register Number | | | | | |

# பகுதி I — தமிழ் — இரண்டாம் தாள்

(உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன்)

## Language — Part I — TAMIL — Paper II

நேரம் : 3 மணி ]

[ மொத்த மதிப்பெண்கள் : 80

*குறிப்பு :* விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை எழுதுக : $3 \times 4 = 12$

1. செம்மொழியின் இலக்கணம் யாது ? அவ்விலக்கணம் தமிழ்மொழியின் பால் பொருந்தியிருப்பதனை நிறுவுக.

2. சமரசத்தை நடைமுறையில் கொண்டுவர மனிதன் செய்ய வேண்டுவனவாகத் திரு. வி. க உரைப்பன யாவை ?

3. கவிதைக்குரிய நல்லியல்புகளைக் கம்பன் உரைக்குமாறு யாங்ஙனம் ?

4. அக்காலத்துக் கல்வியே சிறந்ததாக இளவழகனார் கருதுதற்குக் காரணங்கள் யாவை ?

5. ஈகைப் பண்பில் தமிழ் மக்கள் சிறந்து விளங்கிய தன்மையை விளக்குக.

[ Turn over

www.StudyGuideIndia.com

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை தருக : 3 × 4 = 12

6. விரவுப் பெயராகி இலக்கணத்திற் சொல்லப்படுவன மாடுகளின் பெரும்பயன் கருதியே — என்ற பாவாணர் கூற்றினை விளக்குக.

7. ஆவின் சிறப்புகளாகப் பாவாணர் விதந்துரைப்பன யாவை ?

8. நீதி நூல்களின் பொதுவான இயல்பினைக் குறித்து எழுதுக.

9. ஏற்றத்தாழ்வில்லாத சமுதாயம் அமைய மு. வ. காட்டும் வழிகள் யாவை ?

10. கற்களை அடுக்கி அமைக்கப்பட்டுள்ள கோவில்கள் பற்றி கூறுக.

III. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் இருபது வரிகளின் மிகாது விடை எழுதுக : 1 × 6 = 6

11. நம் தமிழ்மாந்தர் கடைப்பிடித்து ஒழுகிய ஒற்றுமை உணர்வும் ஈகையும் பற்றி ஒரு கட்டுரை வரைக.

12. தேர்தல் முறைகள் பற்றி மு. வ. எடுத்துரைக்கும் கருத்துகள் யாவை ?

www.StudyGuideIndia.com

IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக : 2 × 10 = 20

13. 'சட்டை' அல்லது 'பால்வண்ணம் பிள்ளை' என்னும் சிறுகதையைக் கருப்பொருளும், சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

*அல்லது*

'வேலி' அல்லது 'மகன்' என்னும் கதையில் இடம்பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

14. 'கிழிசல்' அல்லது 'மண்' என்னும் சிறுகதையில் நும் மனம் கவர்ந்த கதைமாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

*அல்லது*

பொறுப்பற்ற முன்கோபக்கார கணவனை, சமுதாயத்தில் ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வரப் பாடுபட்ட அவனது வாழ்க்கைத் துணைவியைப் பற்றி கற்பனையாக ஒரு கதை எழுதுக.

*அல்லது*

உனது பள்ளியிற் சென்ற சுற்றுலாவில் உன்னால் செல்ல முடியாமல் தடையேற்பட்டது குறித்து வருந்தியதாக ஒரு நிகழ்ச்சியினைப் புனைந்து இருபக்க அளவில் கட்டுரை வரைக.

www.StudyGuideIndia.com

V. 15. பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து, அதில் அமைந்துள்ள மையக் கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக. 1 × 10 = 10

செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத்

தேன்வந்து பாயுது காதினிலே – எங்கள்

தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு

சக்தி பிறக்குது மூச்சினிலே !

காவிரி தென்பெண்ணை பாலாறு – தமிழ்

கண்டதோர் வையை பொருணை நதி – என

மேவிய ஆறுபல ஓடத் – திரு

மேனி செழித்த தமிழ்நாடு !

வள்ளுவன் தன்னை உலகினுக்கே – தந்து

வான்புகழ் கொண்ட தமிழ்நாடு – நெஞ்சை

அள்ளும் சிலப்பதி காரமென்றோர் – மணி

ஆரம் படைத்த தமிழ்நாடு !

– பாரதியார்

**குறிப்பு :** **காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் கீழ்க்கண்ட VI மற்றும் VII வினாக்களுக்கு மாற்று வினா வழங்கப்பட்டுள்ளன.**

VI. பின்வரும் தொடர்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் தமிழாக்கம் தருக. 3 × 2 = 6

16. Art is long but life is short.

17. To err is human, to forgive is divine.

18. Prevention is better than cure.

19. Barking dogs seldom bite.

20. Something is better than nothing.

21. Students want to join computer courses.

www.StudyGuideIndia.com

VII. 22. பின்வரும் பழமொழிகளுள் ஒன்றினை விளக்கும் வகையில், வாழ்க்கை நிகழ்வில் அமைத்துப் பத்து வரிகளில் எழுதுக. 1 × 4 = 4

அ) ''பதறிய காரியம் சிதறும்''

ஆ) ''கெடுவான் கேடு நினைப்பான்''

இ) ''உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா ?''

*அல்லது*

*'இயற்கை'* அல்லது *'பூகம்பம்'* என்னும் தலைப்பில் உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை பத்து வரிகளுக்குள் எழுதுக.

*குறிப்பு :* காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா

VI மற்றும் VII-ல் உள்ள வினாக்களுக்கு பதிலாக பின்வரும் பத்தியை கவனமாகப் படித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களில் ஏதேனும் ஐந்தினுக்கு உகந்த விடையை எழுதுக. 5 × 2 = 10

மக்கள் பொழுது போக்கிற்காக நடத்தும் செயல்வகைகளில் நாடகமும் ஒன்று. காண்பவருக்கு வெறும் காட்சியாக மட்டும் இருந்துவிடாமல் அறிவுக்கு இன்பம் தருவது அதன் சிறப்பியல்பு. உயர்ந்த படிப்பினைகளைக் கொண்ட நாடகங்கள், ஒரு சமுதாயத்தை மேம்பாடு அடையச் செய்யும். நாகரிகத்தை வளர்க்கும். ஐம்புலன்களின்



www.StudyGuideIndia.com

வாயிலாக அறிவைத்தரும். அன்றாட வாழ்விலுள்ள தீய இயல்புகளின் கொடுமைகளையும் நல்லியல்புகளையும் நலங்களையும் படம் பிடித்துக் காட்டும். நிகழ்காலத்தை ஊடுருவிப் பார்க்கும். இத்தகைய நாடகங்களையே உலகெங்கும் உள்ள மக்கள் வரவேற்கிறார்கள்.

பழங்காலம் முதலே நாடகம் முத்தமிழில் ஒன்றாக இருந்து வந்திருக்கிறது. சிலப்பதிகாரத்திற்கு முத்தமிழ்க் காப்பியம் என்றும் பெயர் வழங்கி வருகிறது. இடைக்காலத்தில் நாடகம் சமயச் சொற்பொழிவுக்கு மிகவும் பயன்பட்டது. நாடகத்தைக் கூத்து என்றும் கூறுவதுண்டு. கூத்தாட்டு அவைக்குழாத்தற்றே என்பது வள்ளுவர் கூற்று.

*வினாக்கள் :*

16. நாடகத்தின் சிறப்பியல்பு யாது ?

17. நல்ல நாடகங்களினால் கிடைக்கும் பயன் யாது ?

18. உலக மக்களால் வரவேற்கப்படுவது யாது ?

19. முத்தமிழில் ஒன்றாகக் கருதப்படுவது எது ?

www.StudyGuideIndia.com

20. இடைக்காலத்தில் நாடகம் எதற்கு பயன்பட்டது ?

21. நாடகத்தின் மற்றொரு பெயர் என்ன ?

22. கூத்தாட்டு அவைக்குழாத்தற்றே என்று கூறியவர் யார் ?

VIII. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக : $10 \times 1 = 10$

23. மாணவர்கள் கல்வியறிவு ஒழுக்கத்திற் சிறந்து விளங்க வேண்டும்

( தொடரில் உள்ள வாக்கியப் பிழையைத் திருத்துக )

24. ஏட்டு சுவடிகளில் சித்த மருத்துவ செய்திகள் பொதிந்து வைக்கப்பட்டுள்ளன.

( தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக )

25. இந்த செஞ்சுரி 'டென்ஷன்' நிறைந்தது

( ஆங்கிலச் சொற்கலப்பை நீக்கி இனிய தமிழில் எழுதுக)

26. யானை கத்த, நாய் ஊளையிட, சிங்கம் உறுமியது.

( மரபுவழூஉச் சொற்களை நீக்கித் திருத்தமாக எழுதுக )

27. வெண்ணிலாக் கலகலவென்றுச் சிரித்தாள்

( தேவையற்ற இடங்களில் அமைந்த வல்லின மெய்களை நீக்கி எழுதுக )

28. குள்ளாய் என்ன விளை ? என்று கேட்டு குலந்தை அலுதது.

( எழுத்துப்பிழைகளைத் திருத்தி எழுதுக )

www.StudyGuideIndia.com

29. 'வாளை' - 'வாழை' *அல்லது* 'துணி' - 'துனி'

( பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையில் தனித்தனி வாக்கியங்களில் அமைத்தெழுதுக )

30. அப்பிசி மாதம் அட மழம்பாக

( கொச்சையான வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக. )

31. ஸ்ரீரங்கம் : கும்பாபிஷேகம்

( நல்ல தமிழில் எழுதுக )

32. ஒருவன் ஒழுக்கத்தை இழந்தால் அனைத்தையும் இழந்தவனாகிறான் என்றனர் ஆன்றோர்

( பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டெழுதுக).

www.StudyGuideIndia.com